**<u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்</u>**

**முன்னிலை. திருமதி.S.சுஜாதா, எம்.ஏ.,எம்.எல்.,**

**தலைமை தாங்கும் அலுவலர்,**

**தொழிலாளர் நீதிமன்றம்,**

**காஞ்சீபுரம்.**

2026 ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் நாள் திங்கட்கிழமை

**<u>I.D.No. 41/2025</u>**

CNR No.TNKP 18-000189-2025

(உழைப்போர் உரிமை இயக்கத்திற்கும், மதர்சன் ஆட்டோமோட்டிவ் டெக்னாலஜிஸ் அண்டு இன்ஜினியரிங்கிற்கும் இடையிலான தொழிற்தகராறு சட்டம், 1947ன் பிரிவு 10(1)(c) & பிரிவு 10(1)(d)ன் கீழ் தீர்ப்பளிப்பதற்கான தொழிற்தகராறு)

பொதுச்செயலாளர்,
உழைப்போர் உரிமை இயக்கம்,
பதிவு எண்.3077/CNI,
எண்.268, பஜனை கோயில் தெரு,
பிள்ளைப்பாக்கம்,
திருப்பெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 602 105. ... மனுதாரர்/தொழிற்சங்கம்

/எதிராக/

நிர்வாகம்,
மதர்சன் ஆட்டோமோட்டிவ் டெக்னாலஜிஸ்
அண்டு இன்ஜினியரிங்,
செங்கல்பட்டு, திருப்பெரும்புதூர் ரோடு,
போந்தூர், திருப்பெரும்புதூர்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 602 105. ... எதிர்மனுதாரர்/நிர்வாகம்

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறையால் இந்த நீதிமன்றத்தில் தீர்ப்புக்காக அனுப்பப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்ட இந்த தொழிற்தகராறு வழக்கு இறுதி விசாரணைக்காக கடந்த 20.04.2026 அன்று வந்த போது மனுதாரரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திருவாளர்கள். S.குமாரசாமி, K.பாரதி, K.சுரேஷ், M.K.நிவேதா மற்றும் J.மோகன்ராஜ் ஆகியோர் ஆஜராகியும். எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.M.கந்தசாமி, P.அசோக்குமார், P.கிருஷ்ணமூர்த்தி, N.மணி மற்றும் K.அஸ்வின் கிருஷ்ணா ஆகியோர் ஆஜராகியும், இருதரப்பிற்கும் போதிய கால அவகாசம் அளித்தும், மனுதாரர் தரப்பில் கோரிக்கை மனுவும், எதிர்மனுதாரர் தரப்பில் பதில் உரையும் தாக்கல் செய்யாத காரணத்தினால் இருதரப்பினரும் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்ட நிலையில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்வம்**

1. தமிழ் நாடு அரசு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (அ2) துறையால் கடந்த 08.05.2025 தேதியிட்டு அரசாணை (டி)எண்.234ன்படி

கீழ்க்காணும் தொழிற்சங்கத்தின் கோரிக்கைக்கு தீர்வு காணுமாறு எழுவினாவாக குறிப்பிட்டு இந்த நீதிமன்றத்திற்கு அரசிதழில் அறிவிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது.

**<u>எழுவினா</u>**

1. திரு.எம்.தியாகராஜன் என்பவரை பழி வாங்கும் நோக்கில் 30 நாட்கள் பணியிடை நீக்கம் செய்து நிர்வாகத்தால் வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

2. இந்த தொழிற்தகராறு வழக்கு இந்த நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு,மனுதாரர்/தொழிற்சங்கத்திற்கும்,எதிர்மனுதாரர்/நிர்வாகத்திற்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டதில் இரு தரப்பிலும் வழக்கறிஞர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பில் கோரிக்கை மனுவும், எதிர்மனுதாரர் தரப்பில் பதிலுரையும் தாக்கல் செய்யவில்லை.

3. **தொழிலாளர் துறை மற்றும் திறன் மேம்பாட்டு துறையால் பரிந்துரைக்கப்பட்ட கோரிக்கை எதிர்மனுதாரார் நிர்வாகத்திடமிருந்து தொழிற்சங்கத்திற்கு கிடைக்கத்தக்கதா?**

4. அரசால் பரிந்துரைக்கப்பட்ட இந்த வழக்கில் உள்ள கோரிக்கை குறித்து தீர்வு காணும் வகையில் இருதரப்பிலும் எந்தவிதமான ஆவணங்களையும், சாட்சிகளையும் முன்னிலைப்படுத்தவில்லை. ஆகவே இரு தரப்பினருமே தங்களது தரப்பை நிரூபிக்கும் வகையில் மனுதாரர் தொழிற்சங்கத்தின் சார்பில் கோரிக்கை மனுவும், எதிர்மனுதாரர்/ நிர்வாகத்தரப்பில் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யாததாலும், இருதரப்பினருமே வாய்மொழி சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்யாததாலும், தொழிலாளார் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ2) துறையால் இந்த நீதிமன்றத்தில் தீர்ப்புக்காக பரிந்துரைக்கப்பட்ட இந்த தொழிற்தகராறு வழக்கின் கோரிக்கை பொறுத்து முடிவு செய்ய இயலாத நிலையில் நியாயமானது இல்லை என முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக இந்த தொழிற்தகராறு வழக்கில் மனுதாரர்/தொழிற்சங்கத்தின் சார்பாக கோரியுள்ள கோரிக்கைகள் நியாயமானது அல்ல என்று முடிவு செய்து இந்த தொழிற்தாவா தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்வம் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2026 ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S SUJATHA
Digitally signed by S SUJATHA
Date: 2026.05.04 17:00:18 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,

தொழிலாளர் நீதிமன்றம்,

காஞ்சீபுரம்.

<u>**இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :**</u> இல்லை.

S SUJATHA
Digitally signed by S SUJATHA
Date: 2026.05.04 17:00:24 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,

தொழிலாளர் நீதிமன்றம்,

காஞ்சீபுரம்.